FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS) (பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

~~(Under Section 154 Cr.P.C.) (குற்றவி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8082838 C

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 12/2026 Date: நாள் 02.11.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 02.11.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.30 hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.11.2026 Time : நேரம் 13.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02.11.2026 Time : நேரம் 13.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In typing

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 60 Kms / Eest

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வீரசோழன் உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் வைத்து.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.மா.பிச்சை ராமு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.மாணிக்கம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 22.01.1979 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் டிரைவர் (g) Address : முகவரி 15/82D, பாப்பான்குளம் ரோடு, வீரசோழன், திருச்சுழி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.ராம்மூர்த்தி, உதவி மின் பொறியாளர், உதவி மின் பொறியாளர் அலுவலகம், வீரசோழன், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 02.11.2026 மதியம் 13.30 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தாலுகா, வீரசோழன், பாப்பான்குளம் ரோடு, கதவு எண்.15/82D, என்கிற முகவரியை சேர்ந்த திரு.மாணிக்கம் என்பவரின் மகன் திரு.மா.பிச்சை ராமு என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 02.11.2026 மதியம் 14.30 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.ராமமூர்த்தி, உதவி மின் பொறியாளர், உதவி மின் பொறியாளர் அலுவலகம், வீரசோழன், விருதுநகர் மாவட்டம் என்பவர்மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2026 சட்டப்பிரிவு7of the Prevention of Corruption Act 1988 as amended in 2018-ன்படி

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

2.11.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

02/11/26 at 16.00hrs.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. JASMINE MUMTAJ
Rank: நிலை INSPR. No. எண் .....

விருதுநகர் மாவட்ட ஊ.தக.பிரிவு குற்ற எண்.12/2026 பிரிவு 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.மா.பிச்சை ராமு அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்பூர் மா.பிச்சை ராமு, 46/2026, த/பெ.மாணிக்கம், எண்.15/82D, பாப்பான்குளம் ரோடு, வீரசோழன், திருச்சுழி தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர் மாவட்டம். ஐயா, நான் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தாலுகா, வீரசோழன், பாப்பான்குளம் ரோடு என்ற முகவரியில் குடியிருந்து, ரெகுலர் சர்வீஸ் லாரி டிரைவராக வேலை செய்து வருகிறேன். மேற்படி முகவரியில் கடந்த 24.07.2021 முதல் சிறு குறு தொழிலாக குளிர்பானம் தயாரித்து விற்பனை செய்து வருகிறேன். இந்த தொழிலுக்காக பயன்படுத்தும் மின் இணைப்பு (3A1) எண்.07-216-007-700-இல் மின் அழுத்தம் குறைவாக கிடைப்பதால், குளிர்பானம் இயந்திரம் இயக்குவதை நிறுத்தி வைத்துள்ளேன். இதனால் எனக்கு பொருளாதாரத்தில் பெரும் இழப்பீடு ஏற்பட்டதால், என்னுடைய சிறு குறு தொழிலை மீண்டும் தொடர்ந்து இயங்குவதற்கு அதிகமான மின்சாரம் வழங்குமாறு வீரசோழன் உதவி மின்பொறியாளர் அவர்களுக்கு கடந்த 09/2026 மாதம் மனு அனுப்பியிருந்தேன். அதுசம்மந்தமாக வீரசோழன் உதவி மின்பொறியாளர் அவர்கள், கடந்த 31.10.2026 அன்று காலை சுமார் 09.15 மணியளவில் 9445854712 என்ற தொலைபேசி எண்ணிலிருந்து என்னுடைய 9789405376 என்ற தொலைபேசி எண்ணிற்கு 2 முறை அழைத்தார். அப்போது, நான் லாரியை ஓட்டிக்கொண்டிருந்ததால், அவரது அழைப்பை ஏற்கமுடியாமல், லாரியை ஓரமாக நிறுத்திவிட்டு, என்னுடைய 9789405376 என்ற தொலைபேசி எண்ணிலிருந்து அவருடைய 9445854712 என்ற தொலைபேசி எண்ணிற்கு அழைத்து விவரம் கேட்டேன். அதற்கு அவர், என்னங்க மனுவெல்லாம் அனுப்பியிருக்கீங்க, நேர்லலெல்லாம் வரமாட்டீங்கலா, வருகின்ற திங்கட்கிழமை அலுவலகத்திற்கு நேர்ல வந்து பாருங்க என்று சொன்னார். அதன்படி இன்று (02.11.2026) காலை சுமார் 11.30 மணியளவில் வீரசோழன், உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த உதவி மின்பொறியாளர் திரு.ராமமூர்த்தி என்பவரை சந்தித்து, என்னுடைய பெயரிலுள்ள மின் இணைப்பு எண்.07-216-007-700-இல் அதிகமான மின்சாரம் வழங்குவது சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் அலுவலக செலவிற்கு ரூ.6,500/- பணம் கொடுக்க வேண்டும் என்றார். அதற்கு நான், ஏற்கனவே தொழில் செய்யாமல் ரெம்ப கஷ்டப்படுறேன், இப்ப லாரி டிரைவராகத்தான் வேலை செய்றேன், அவ்வளவு பணம் கொடுக்க முடியாது, பார்த்து செய்யுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர், என்னங்க நீங்களே இப்படி சொன்னா எப்படிங்க, சரி முதல்ல ரூ.2,000/- பணத்தையாவது இன்னைக்கு சாயந்திரம் கொண்டுவந்து கொடுங்க, உங்க வேலையை முடிச்சு கொடுத்தபிறகு மீதப்பணத்தை கொடுங்க, இந்த ரூ.2,000/- பணத்தை கொண்டுவந்து கொடுத்தால்தான் உங்க மனு சம்மந்தமாக அதிகமான மின்சாரம்

வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்று கண்டிப்பாக சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம், என்னுடைய பெயரிலுள்ள மின் இணைப்பு (3A1) எண்.07-216-007-700-க்கு அதிகமான மின்சராம் வழங்க நடவடிக்கை எடுப்பதற்கு முன்பணமாக ரூ.2,000/- லஞ்சப்பணம் கேட்ட வீரசோழன், உதவி மின்பொறியாளர் திரு.ராமமூர்த்தி என்பவர்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd) M.PITCHAI RAMU 02.11.26 Sir, Received the complaint on 02.11.2026 at 13.30 hrs, The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to SP/SR, DVAC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.12/2026 u/s. 7 of the P.C Act 1988 as amended in 2018 on 02.11.2026 at 14.30 hrs and took up for investigation. (Sd) (ஷே.ஜாஸ்மின் மும்தாஜ்) 02.11.2026 Inspr/V&AC/VN.

The original FIR along with original complaint is submitted to the court of the Principal District and Sessions Judge cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

2/11/26.
Inspr/V&AC/VN.